தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




மலர் : 02 | இதழ் :199 | 4 - பக்கம் | 15.02.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6




**பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார்**
**மருள்தீர்ந்த மாசறு காட்சி யவர்.**

*விளக்கம்:*

மயக்கம் சிறிதுமில்லாத மாசற்ற அறிவுடையவர் மறந்தும்கூடப் பயனற்ற சொற்களைச் சொல்ல மாட்டார்.

## 2030-க்குள் இந்திய - அமெரிக்க வர்த்தகத்தை ரூ.43 லட்சம் கோடியாக அதிகரிக்க இலக்கு



வாஷிங்டன்: பிரதமர் மோடி-அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சந்திப்பில், வரும் 2030-க்குள் இருதரப்பு வர்த்தகத்தை ரூ. 43.43 லட்சம் கோடியாக (500 பில்லியன் டாலர்) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள் பயணமாக அமெரிக்கா சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ள பிரதமர் மோடி, "வெள்ளை மாளிகையில் அதிபர் ட்ரம்ப் உடனான சந்திப்பு மிகச் சிறந்ததாக இருந்தது. எங்கள் பேச்சுவார்த்தைகள் இந்தியா-அமெரிக்கா நட்புறவுக்கு குறிப்பிடத்தக்க உத்வேகத்தை அளிக்கும்!

அதிபர் ட்ரம்ப் அடிக்கடி MAGA பற்றிப் பேசுகிறார். வளர்ச்சி அடைந்த பாரதத்தை நோக்கி நாங்கள் பணியாற்றி வருகிறோம். அமெரிக்க சூழலில் இதை MIGA ('மேக் இந்தியா கிரேட் அகெய்ன்') என மொழிபெயர்க்கலாம். இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து, செழிப்புக்காக ஒரு MEGA கூட்டாண்மையைக் கொண்டுள்ளன" என தெரிவித்துள்ளார்.

2030 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை இரட்டிப்பாக்க இந்தியா இலக்கு வைத்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். போர் விமானங்கள் உட்பட அமெரிக்க பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதை அதிகரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ட்ரம்ப், இந்தியாவின் முன்னணி எண்ணெய் மற்றும் எரிவாயு சப்ளையராக அமெரிக்கா திகழும் என்றும் கூறினார்.

அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா அதிக வரி விதிப்பதாகக் கூறிய ட்ரம்ப், சில பொருட்களுக்கு விதிக்கப்படும் வரி காரணமாக அவற்றை ஏற்றுமதி செய்வது சாத்தியமற்றதாக உள்ளதாகத் தெரிவித்தார். "இந்தியா பல பொருட்களுக்கு 30, 40, 60, மற்றும் 70 சதவீத வரிகளை விதிக்கிறது. சில சந்தர்ப்பங்களில், அதை விட மிக அதிகமாகவும் வரி விதிக்கப்படுகிறது. உதாரணமாக, இந்தியாவிற்குள் நுழையும் அமெரிக்க கார்களுக்கு 70 சதவீத வரி விதிக்கப்பட்டால், அந்த கார்களை விற்பனை செய்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

இன்று, இந்தியாவுடனான அமெரிக்காவின் வர்த்தக பற்றாக்குறை கிட்டத்தட்ட 100 பில்லியன் டாலர்களாக உள்ளது. இந்த நீண்டகால ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்ய பிரதமர் மோடியும் நானும் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டுள்ளோம்" என தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, வரும் 2030க்குள் இருதரப்பு வர்த்தகத்தை ரூ. 43.43 லட்சம் கோடியாக (500 பில்லியன் டாலர்) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை தெரிவித்துள்ள பிரதமர் அலுவலகம், "இதன்மூலம் இருதரப்பு வர்த்தகம் தற்போதுள்ளதைவிட இரு மடங்காக உயரும். இதற்காக, இருதரப்பு வர்த்தகத்திற்கான ஒரு புதிய தைரியமான இலக்கை தலைவர்கள் நிர்ணயித்துள்ளனர்.

இந்த அளவிலான லட்சியத்திற்கு புதிய, நியாயமான வர்த்தக விதிமுறைகள் தேவைப்படும் என்பதால், 2025 இலையுதிர்காலத்தில் பரஸ்பர நன்மை பயக்கும், பல துறை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் (BTA) முதல் கட்ட பேச்சுவார்த்தை நடத்தும் திட்டங்களை தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும், வர்த்தக உறவை உறுதி செய்வதற்கும் மூத்த பிரதிநிதிகளை நியமிப்பதற்கு தலைவர்கள் உறுதியளித்தனர். அமெரிக்காவும் இந்தியாவும் பொருட்கள் மற்றும் சேவைகள் துறை முழுவதும் இருதரப்பு வர்த்தகத்தை வலுப்படுத்தவும் ஆழப்படுத்தவும் ஒருங்கிணைந்த அணுகுமுறை மேற்கொள்ளப்படும். மேலும், சந்தை அணுகலை அதிகரிப்பதற்கும், வரி மற்றும் வரி அல்லாத தடைகளை குறைப்பதற்கும், விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துவதற்கும் அதிகாரிகள் குழு பாடுபடும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டணி சலசலப்புக்கு இடையே ராகுல் காந்தியுடன் ஆதித்ய தாக்கரே சந்திப்பு



புதுடெல்லி: மகாராஷ்டிரா துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவுக்கு, சரத்பவார் விருது வழங்கியதால் மகா விகாஸ் அகாடி கூட்டணியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே சிவசேனா (உத்தவ் அணி) ஆதித்ய தாக்கரே, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுலை நேற்று முன்தினம் சந்தித்தார். மகாராஷ்டிரா துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவுக்கு புனேவைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் சர்ஹத் சார்பில் மகாத்ஜி ஷிண்டே ராஷ்ட்ரா கவுரவ் புரஸ்கார் விருது வழங்கப்பட்டது. இதை மகா விகாஸ் அகாடி கூட்டணியில் உள்ள தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் வழங்கினார். இந்த நிகழ்வு மகா விகாஸ் அகாடி கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், டெல்லியில் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தியை, சிவசேனாவைச் (உத்தவ் அணி) சேர்ந்த ஆதித்ய தாக்கரே நேற்று முன்தினம் சந்தித்தார். இதில் தேர்தல் ஆணையத்தின் மீதான குற்றச்சாட்டுகள், ஏக்நாத் ஷிண்டேவுக்கு சரத்பவார் விருது வழங்கியது உட்பட பல விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது. விருது சர்ச்சை: ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அர்விந்த் கேஜ்ரிவாலையும், ஆதித்ய தாக்கரே சந்திக்க திட்டமிட்டுள்ளார். ஏக்நாத் ஷிண்டேவுக்கு சரத் பவார் விருது வழங்கியது குறித்து கருத்து தெரிவித்த ஆதித்ய தாக்கரே, ''மகாராஷ்டிராவுக்கு எதிரானவர்கள், தேச விரோதிகள். இதுபோன்ற நபர்களை நாம் கவுரவிக்க முடியாது. இது நமது கொள்கைகளுக்கு எதிரானது. சரத்பவாரின் கொள்கை பற்றி எனக்கு தெரியாது'' என்றார்.

# பணி நிரந்தரமே பிரச்சினைக்கு தீர்வு: பகுதிநேர ஆசிரியர்கள் ஆதங்கம்




சென்னை: திமுக தேர்தல் வாக்குறுதிபடி பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு பகுதிநேர ஆசிரியர்கள் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில், 14 கல்வி ஆண்டுகளாக பணியாற்றி வரும், 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்கள் வாழ்வாதாரத்தை இழந்து பரிதவித்து வருகின்றனர். கடந்த 2016 மற்றும் 2021 ஆண்டு தேர்தலின்போது, திமுக தேர்தல் அறிக்கையில் 'பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்வோம்' என வாக்குறுதி அளிக்கப்பட்டது. பகுதிநேர ஆசிரியர்கள் திமுக தேர்தல் அறிக்கையில் 181 வது வாக்குறுதி, நிறைவேற்றப்படுமா என எதிர்பார்த்து காத்திருகின்றனர்.

தமிழக அரசின் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பகுதிநேர ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இதன்படி, 3 ஆயிரத்து 700 உடற்கல்வி ஆசிரியர்கள், 3 ஆயிரத்து 700 ஓவிய ஆசிரியர்கள், 2 ஆயிரம் கணினி அறிவியல், ஆயிரத்து 700 தையல் ஆசிரியர்கள், 300 இசை ஆசிரியர்கள், 20 தோட்டக்கலை ஆசிரியர்கள், 60 கட்டடக் கலை ஆசிரியர்கள், 200 வாழ்வியல் திறன் ஆசிரியர்கள் உட்பட மொத்தம் 12 ஆயிரம் பேர் தற்காலிக அடிப்படையில், ரூ.12 ஆயிரத்து 500 தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருகின்றனர். கடந்த 2012ம் ஆண்டு இந்தப் பணியில் அமர்த்தியது முதல், தற்போதுவரை 14 ஆண்டுகளாகவும், மே மாதம் சம்பளம், போனஸ், வருங்கால வைப்பு நிதி, மருத்துவ காப்பீடு, பணிக்காலத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு நிவாரண நிதி போன்றவை கிடையாது என்ற நிலையில் பரிதவித்து வருகின்றனர். இந்த சொற்ப சம்பளத்தில் வாழ்வாதாரத்திற்கு போராடி வருகின்றனர். தற்போது 47 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் தற்காலிகப் பணியிடங்களை பள்ளிக்கல்வித்துறையில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த காலங்களில் பகுதிநேர ஆசிரியர்கள், பகுதிநேர பணியாளர்கள், தினக்கூலி தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். அதேப் போல், பள்ளிக்கல்வித்துறை மூலம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியில் தற்காலிகமாக பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களை, முறைப்படுத்தி பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2012ம் ஆண்டு, மாதம் ரூ.5 ஆயிரம் தொகுப்பூதியத்தில் அப்போது 16 ஆயிரத்து 500 பேர் பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். சம்பளம் உயர்வு முதன் முதலில், 2014ம் ஆண்டில் ரூ.2 ஆயிரம் வழங்கப்பட்டது. அப்போது ஆயிரம் காலியிடங்கள் ஏற்பட்டதால், 15 ஆயிரம் பேர் பணியில் இருந்தனர். இரண்டாவது முறையாக சம்பளம் உயர்வு கடந்த 2017-ம் ஆண்டில் ரூ.700 உயர்த்தி வழங்கப்பட்டது. அப்போது 3 ஆயிரம் காலியிடங்கள் ஏற்பட்டதால், 13 ஆயிரம் பேர் பணியில் இருந்தனர். மூன்றாவது முறையாக சம்பளம் உயர்வு, கடந்த 2021-ம் ஆண்டில் ரூ.2 ஆயிரத்து 300 உயர்த்தி, ரூ.10 ஆயிரம் மாத சம்பளமாக வழங்கப்பட்டது. அப்போது 4 ஆயிரம் காலியிடங்கள் ஏற்பட்டதால், 12 ஆயிரத்து 500 பேர் பணியில் இருந்தனர்.

இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு சட்டசபை பொதுத் தேர்தலின்போது, திமுக-வின் தேர்தல் அறிக்கையில், 181வது வாக்குறுதியாக, பகுதிநேர ஆசிரியர்கள் பணிநிரந்தரம் கோரிக்கை இடம்பெற்றது. இதன் பின், தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சி நடக்கிறது. இதனால் தங்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி, பல கட்ட போராட்டங்களை பகுதிநேர ஆசிரியர்கள் நடத்தி வலியுறுத்தி வருகின்றனர்.

சட்டசபையில் அனைத்து அரசியல் கட்சிகளின் எம்.எல்.ஏ.,க்கள் கவன ஈர்ப்பு கொடுத்து குரல் கொடுத்து வலியுறுத்தி வருகின்றனர். மக்கள் மன்றத்திலும் அனைத்து கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றனர். இதன் காரணமாக கடந்த 2024ம் ஆண்டில், ரூ.2 ஆயிரத்து 500 சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இதனால் தற்போது மாதம் ரூ.12 ஆயிரத்து 500 சம்பளம் வழங்கப்படுகிறது. தற்போதும் காலியிடங்கள் ஏற்பட்டு, 12 ஆயிரம் பேர் மட்டுமே பணி புரிந்து வருகின்றனர்.

சம்பள உயர்வுடன் சேர்த்து அறிவித்த ரூ.10 லட்சம் மருத்துவ காப்பீடு அறிவிப்போடு உள்ளது. இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. மே மாதம் சம்பளம், பொங்கல் போனஸ், இ.பி.எப்., இ.எஸ்.ஐ., குடும்ப நலநிதி உள்ளிட்ட எதுவுமே கடந்த காலங்களில் வழங்கப்படவில்லை. பகுதி நேர ஆசிரியர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்தி, கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், எதிர்கால வாழ்வாதாரத்தை எண்ணி, மிகுந்த மன வேதனையில் உள்ளனர்.

தற்போது, அதிமுக, காங்கிரஸ், பாமக, விசிக, மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ஓபிஎஸ் அதிமுக, தமிழக வாழ்வுரிமை கட்சி, கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, புரட்சி பாரதம், எஸ்.டி.பி.ஐ., தேமுதிக, அமமுக, தமிழ் மாநில காங்கிரஸ், நாம் தமிழர் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் உள்ளிட்ட கட்சிகள் சார்பில், தி.மு.க., தேர்தல் வாக்குறுதிபடி பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்" என தெரிவித்துள்ளார்.

## குன்னூரில் போதை பொருள் விழிப்புணர்வு குறித்த மாணவர்களுக்கான பேரணியை வட்டாச்சியர் தொடக்கி வைத்தார்.



நீலகிரி மாவட்டம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில், குன்னூர் வருவாய்துறை ஏற்பாட்டில் சாராயம், கள்ளச்சாராயம், போலி மதுபானங்கள் மற்றும் கஞ்சா போன்ற போதை பொருட்கள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி குன்னூரில் நேற்று நடைபெற்றது. முன்னதாக பெட்போர்டு பகுதியில் வட்டாச்சியர் ஜவஹர், பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். பின் அரசு மருத்துவமனை வழியாக குன்னூர் தீயணைப்பு நிலையத்திற்கு வந்தடைந்த பேரணியில் 100 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள், கையில் போதை பொருட்களுக்கு எதிரான பதாகைகளை ஏந்தி ஊர்வலமாக வந்தனர். பின் தீயணைப்பு நிலையத்தில் பள்ளி மாணவர்களுக்கு வட்டாச்சியர் சில அறிவுரைகளை வழங்கினார். குறிப்பாக "மாணவர்கள் போதை பழக்கத்திற்கு அடிமையாகக் கூடாது. போதைப்பொருள் எங்கேயாவது விற்றால் தகவல் தெரிவிக்க வேண்டும். தகவல் தெரிவிப்பவர்கள் பெயர்கள் ரகசியமாக வைக்கப்படும்" என்று தெரிவித்தார். மாணவர்கள் இந்த விழிப்புணர்வுக்கு பின் போதை பொருட்களுக்கு அடிமையாக கூடாது என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

## பத்திரபதிவு ஆவணங்களின் குறைவு முத்திரைத் தீர்வுமுகாம் தாராபுரம் பத்திர பதிவு துறை அலுவலகத்தில் நடைபெற்றது



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சார்பு பதிவாளர் உமா மகேஸ்வரி தலைமையில் தனி வட்டாட்சியர் புவனேஸ்வரி முன்னிலையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் அவர்களின் சுற்றறிக்கையின்படி இந்திய முத்திரை சட்டம் 1899 பிரிவு 47 அ(1) மற்றும் 47 அ(3) மற்றும் வருவாய் மீட்பு சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள இனங்களுக்கான குறைவு முத்திரை தீர்வு மற்றும் குறைவு பதிவு கட்டணம் செலுத்துவதற்கான சிறப்பு முகாம் தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்றது இந்த முகாமில் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்

# தைவானில் பல்பொருள் அங்காடியில் கியாஸ் வெடிப்பு; 4 பேர் பலி



தைப்பே, பிப்.15

தைவானில் தைசங் நகரில் ஷின் கோங் மித்சு கோஷி என்ற பெயரிலான பல்பொருள் அங்காடி ஒன்று 12வது தளத்தில் இயங்கி வருகிறது. இதில், உணவு விற்பனை செய்யும் பகுதியில் திடீரென இன்று காலை கியாஸ் வெடிப்பு ஏற்பட்டது. இதில், கட்டிடத்தின் வெளிப்புற பகுதிகள் சேதமடைந்தன.

இந்த சம்பவத்தில் 4 பேர் பலியானார்கள். 8 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் 2 பேர் சீனாவின் நிர்வாகத்திற்கு உட்பட்ட மக்காவ் பகுதியில் இருந்து வந்துள்ளனர். ஒரு குடும்பத்திலுள்ள 7 பேர் சுற்றுலாவுக்காக வந்த இடத்தில் இவர்கள் பலியாகி உள்ளனர். இதனை மக்காவ் சுற்றுலா அலுவலகம் இன்று உறுதி செய்துள்ளது.

இதனை தொடர்ந்து தீயணைப்பு துறையினர் இன்று காலை 11.30 மணியளவில் சம்பவ பகுதிக்கு விரைந்து சென்றனர்.

இந்த சம்பவ பகுதிக்கு அருகே நகர மேயர் லு ஷியோவ்யென்னின் அலுவலகம் அமைந்துள்ளது. கியாஸ் வெடிப்பால் ஏற்பட்ட அதிர்ச்சியை உணர்ந்தேன் என செய்தியாளர்களிடம் பேசும்போது யென் கூறியுள்ளார்.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி விசாரிக்கும்படி அரசின் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுக்கும் அதிபர் லாய் சிங்தே உத்தரவிட்டு உள்ளார்.

# மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி அமல்



புதுடெல்லி, பிப்.15

மணிப்பூரில் மெய்தி சமூகத்தினர் பெரும்பான்மையாக வசித்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று கோரி வருகிறார்கள். அதற்கு 'குகி' என்ற பழங்குடியின சமுதாயத்தினர் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். மெய்தி சமூகத்தினர் கோரிக்கையை பரிசீலிக்குமாறு கடந்த 2023ம் ஆண்டு மாநில அரசுக்கு மணிப்பூர் ஐகோர்ட்டு உத்தரவிட்டது. அந்தமுடிவை சுப்ரீம் கோர்ட்டு விமர்சித்தது. இதற்கிடையே, மெய்தி சமூகத்தினரின் கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த 2023ம் ஆண்டு மே 3ந் தேதி குகி பழங்குடியினர் பேரணி நடத்தினர். அப்போது, சில இடங்களில் அவர்களுக்கும், மெய்தி சமூகத்தினருக்கும் இடையே மோதல் வெடித்தது.

சுராசந்த்பூர், பிஷ்ணுபூர் ஆகிய மாவட்டங்களில் இந்த மோதல், கலவரமாக மாறியது. வீடுகள், கடைகளுக்கு தீவைப்பு சம்பவங்கள் நடந்தன. மற்ற மாவட்டங்களுக்கும் கலவரம் பரவியது. இந்த கலவரம் சுமார் 2 ஆண்டுகளாக நீடித்தது. இதில், பெண்கள், குழந்தைகள் உள்பட 250க்கும் மேற்பட்டோர் பலியானார்கள். ஏராளமானோர் காயம் அடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறி, நிவாரண முகாம்களில் தங்கினர்.

ஊரடங்கு உத்தரவு போட்டும் கலவரம் அடங்கவில்லை. இரு சமூகங்களை சேர்ந்த ஆயுதக்குழுக்கள், துப்பாக்கி சண்டையிலும் ஈடுபட்டு வருகின்றன. மத்திய, மாநில அரசுகள் கலவரத்தை ஒடுக்க தவறி விட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. நாடாளுமன்றத்திலும் பிரச்சினை எழுப்பி, அமளியில் ஈடுபட்டனர். பிரதமர் மோடி மணிப்பூர் செல்லாததையும் விமர்சித்தனர். வன்முறையை ஒடுக்கி, அமைதியை நிலைநாட்ட தவறியதாக ஒரு மாதத்துக்கு முன்பு, மணிப்பூர் மாநில முதல்மந்திரி பைரேன்சிங் மன்னிப்பு கோரினார்.

இந்தநிலையில், மணிப்பூர் முதல்மந்திரியாக இருந்த பிரேன் சிங் கடந்த 9ம் தேதி கவர்னர் அஜய் குமார் பல்லாவை சந்தித்து தனது முதல்மந்திரி பதவியை ராஜினாமா செய்வதாக கூறி, கவர்னரிடம் ராஜினாமா கடிதத்தை அளித்தார். இதனையடுத்து அவரது ராஜினாமா கடிதத்தை அஜய் குமார் பல்லா ஏற்றுக்கொண்டார். இதனையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வந்தது. இந் நிலையில், மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டு உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்து உள்ளது. அரசியலமைப்பின் 356வது பிரிவின் அடிப்படையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி திரவுபதி முர்மு பிறப்பித்து உள்ளார்.

புதிய முதல்மந்திரியை பாஜக தேர்வு செய்வதற்கான அவகாசம் முடிந்தும் யாரும் தேர்வு செய்யப்படவில்லை. 6 மாதங்களுக்குள் சட்டசபையை கூட்ட வேண்டும் என்ற கெடு நேற்றுடன் முடிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# திட்டமிட்டபடி மேலும் பல இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிப்போம்: ஹமாஸ் அமைப்பு



காசா முனை, பிப்.15

இஸ்ரேல், ஹமாஸ் இடையே ஓராண்டாக நீடித்து வந்த போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணய கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டது. பணயகைதிகளுக்கு ஈடாக இஸ்ரேல் தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பாலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக் கொண்டுள்ளது.

போர் நிறுத்தத்தின் முதற்கட்டமாக 6 வாரங்களில் (42 நாட்கள்) 33 பணய கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டது. 33 பணய கைதிகளுக்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பாலஸ்தீனியர்கள் 1,904 பேரை இஸ்ரேல் விடுதலை செய்கிறது.

6 வார போர் நிறுத்தம் அமலில் உள்ள நிலையில் இதுவரை இஸ்ரேலிய பணய கைதிகளில் 16 பேரை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. அதற்கு ஈடாக தற்போதுவரை 480க்கும் மேற்பட்ட பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

இதனிடையே, காசாவிற்குள் கூடாரங்கள் மற்றும் தங்குமிடங்களை இஸ்ரேல் அனுமதிக்கவில்லை எனவும், போர்நிறுத்த விதிமீறலில் ஈடுபட்டதாகவும் குற்றம்சாட்டி, இஸ்ரேலிய பணயக்கைதிகளின் விடுதலையில் தாமதத்தை ஏற்படுத்தப்போவதாக ஹமாஸ் தெரிவித்திருந்தது.

அதே சமயம், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் ஆதரவுடன், பணயக்கைதிகள் விடுவிக்கப்படாவிட்டால் மீண்டும் தாக்குதலை தொடங்குவோம் என இஸ்ரேல் அச்சுறுத்தியது.

இந்த நிலையில், திட்டமிட்டபடி மேலும் பல இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிக்க உள்ளதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. இதன்படி,

வரும் சனிக்கிழமை 3 இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிக்கப்பட உள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் தரப்பில் இருந்து இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. ஹமாஸ் அமைப்பின் இந்த அறிவிப்பின் மூலம் காசாவில் போர்நிறுத்தத்திற்கு பாதிப்பு ஏற்படாது என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒட்டியம்பாக்கம் கிண்டி புதைவட மின்பாதை பணி: ராதாகிருஷ்ணன் நேரில் ஆய்வு



சென்னை, பிப்.15

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலமாக புதியதாக அமைக்கப்பட்டுள்ள கிண்டி மற்றும் தரமணி 400 கிலோ வோல்ட் வளிமகாப்பு துணை மின் நிலையங்கள் மின்னூட்டம் பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு ரூ.718 கோடி திட்ட மதிப்பீட்டில் 32.09 கி.மீ. ஒட்டியம்பாக்கம் கிண்டி 400 கிலோ வோல்ட்புதைவட மின் பாதை அமைக்கும் பணி 2023ம் ஆண்டு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், மேடவாக்கம் ஜங்சனில் நடைபெற்று வரும் புதைவட மின்பாதை பணியினை தமிழ்நாடு மின் தொடரமைப்பு, மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் நேரில் சென்று ஆய்வு செய்து விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு பொறியாளர்களை கேட்டுக் கொண்டார். இந்த புதைவட மின் பாதை அமைக்கும் பணி ஒட்டியம்பாக்கம், பெரும்பாக்கம், மேடவாக்கம், பள்ளிக்கரணை, வேளச்சேரி, ஆதம்பாக்கம், ஆலந்தூர் மற்றும் கிண்டி வரை அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் சுமார் 90 சதவீதம் வரை நிறைவடைந்துள்ளது.

மேலும், இப்பணிகளை விரைவாக முடிக்க பணியாற்றி வரும் மின்வாரிய அலுவலர்களை பாராட்டினார். எதிர்வரும் கோடை கால மின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் போர்க்கால அடிப்படையில் விரைந்து முடித்து புதியதாக அமைக்கப்பட்டுள்ள கிண்டி மற்றும் தரமணி 400 கிலோ வோல்ட் வளிமகாப்பு துணை மின்நிலையங்களை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

இத்திட்டத்தின் மூலம் தென்சென்னையில் மின் விநியோகத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்தி, உறுதியான மின் கட்டமைப்பின் மூலம் அரசு கட்டிடங்கள், தொழில் நிறுவனங்கள், ஐ.டி. நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மெட்ரோ இரயில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு சீரான தடையற்ற மின்சாரம் வழங்க இயலும். இந்த ஆய்வின்போது மேற்பார்வை பொறியாளர் ஆர். மணிமாறன், செயற்பொறியாளர்ஏ. மலர்விழி, உதவி செயற்பொறியாளர் வி. புஷ்பராஜ், சி. சுதா மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# இந்தியாவில் ஸ்டார்லிங்க் நிறுவனம்... பிரதமர் மோடியுடன் ஆலோசிக்க எலான் மஸ்க் திட்டம்



வாஷிங்டன் டி.சி., பிப்.15

பிரான்ஸ் நாட்டில் நடந்த செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் இணை தலைமையேற்பதற்காக பிரதமர் மோடி கடந்த 10ந்தேதி டெல்லியில் இருந்து தனி விமானத்தில் புறப்பட்டு சென்றார். இதன்பின்னர், பாரீஸ் நகரில் நடைபெற்ற ஏ.ஐ. உச்சி மாநாட்டில், அந் நாட்டு அதிபர் மேக்ரானுடன் பிரதமர் மோடி ஒன்றாக பங்கேற்றார்.

இந்த உச்சி மாநாட்டில், உலக நாடுகளின் தலைவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதன்பின்னர் ஓட்டலுக்கு திரும்பிய பிரதமர் மோடி இந்திய வம்சாவளியினரை சந்தித்து பேசினார். இதேபோன்று, பிரதமர் மோடி பாரீஸ் நகரில் நடந்த தலைமை செயல் அதிகாரிகளுக்கான மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, பிரான்ஸ் உடனான வலுவான நட்புறவு மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களுக்கான வாய்ப்புகளை விரிவுப்படுத்தி இருப்பது பற்றி பேசினார்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களின்தலைமை செயல் அதிகாரிகளை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். இதன்படி, கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சையையும் சந்தித்து பேசினார்.

பிரதமர்மோடியுடனான சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்த சுந்தர் பிச்சை, இந்தியாவில் ஏ.ஐ. தொழில்நுட்பம் கொண்டு வர கூடிய வியக்கத்தக்க வாய்ப்புகளை பற்றியும் மற்றும் இந்தியாவின் டிஜிட்டல் உருமாற்றத்திற்காக நாம் நெருங்கி பணியாற்றுவதற்கான வழிகளை பற்றியும் விவாதித்தோம் என கூறினார்.

பிரான்ஸ் சுற்றுப்பயணம் முடிந்ததும், பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு புறப்பட்டார். இன்று காலை அந்நாட்டுக்கு சென்ற அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு உள்ள பிரதமர் மோடியை, எக்ஸ் வலைதளம் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரான எலான் மஸ்க் இன்று நேரில் சந்தித்து பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சந்திப்பில், தெற்காசியாவில், குறிப்பிடும்படியாக இந்தியாவில் ஸ்டார்லிங்க் நிறுவனத்தின் செயற்கைக்கோள் பிராட்பேண்ட் சேவையை தொடங்கும் திட்டம் பற்றி பேசப்படும் என கூறப்படுகிறது.

இந்தியாவில் ஸ்டார்லிங்க் நிறுவனம் தடம் பதிக்க விரும்புகிறது. அலைக்கற்றை ஏலம் விடுவதற்கு பதிலாக அவற்றை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மஸ்க் யோசனை தெரிவித்து உள்ளார். இதனை இந்திய அரசும் ஏற்று கொண்டுள்ளது என தெரிகிறது.

எனினும், ஸ்டார்லிங்க் நிறுவனத்தின் உரிமத்திற்கான விண்ணப்பம் இன்னும் மறுஆய்வு செய்யப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது. இதேபோன்று, பிரதமர் மோடி மற்றும் மஸ்கிற்கு இடையே, இந்தியாவில் டெஸ்லா நிறுவனம் வருவதற்கான ஆலோசனை நடைபெறுவது பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

எனினும், இந்தியாவில் இருந்து மின்சார வாகனங்களுக்கான பொருட்களை வாங்குவது அதிகரித்து உள்ள சூழலில்,

இந்த சந்திப்பில் அது பற்றி விவாதிக்கப்படலாம் என்றும் பார்க்கப்படுகிறது.

# நாட்றம்பள்ளி அருகே சாலை விபத்தில் சட்டக்கல்லூரி மாணவன் உட்பட 2பேர் பலி



திருப்பத்தூர், பிப்.15

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த வெலக்கல்நத்தம் அருகே சென்னை டூ பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் கோயம்புத்தூர் பகுதியை சேர்ந்த சிங்கராவேலன் மகன் மோகன்தாஸ் (28) சட்ட கல்லூரி மாணவன் காரில் அதிவேகமாக சென்று கொண்டு இருந்த போது எதிரே சாலையை கடக்க முயன்ற கவிதா(40) என்கிற பெண் மீது மோதி கார் அருகே உள்ள வீட்டினுள் புகுந்த விபத்தில் கவிதா மற்றும் மோகன் தாஸ் சம்பவ இடத்திலே உயிரிழப்பு.

இந்த விபத்து குறித்து நாட்றம்பள்ளி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எதிர்கட்சிகளின் வாக்கு வங்கியைவிட திமுகவின் வாக்கு வங்கி அதிகம்: அமைச்சர் ரகுபதி



சென்னை, பிப்.15

சென்னை அண்ணா அறிவாலயத்தில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியில் மக்கள்நலத் திட்டங்கள் ஒவ்வொன்றும் எல்லா குடும்பங்களையும் சென்றடைந்து இருக்கின்றது. பலன் அடையாத குடும்பமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்றைய ஆட்சி நடைபெறுகிறது. இதனை அண்மையில் வெளிவந்துள்ள இந்தியா டு டே பத்திரிக்கையுடன் CVOTERS இணைந்து நடத்திய Mode of the nation என்கிற கருத்துக்கணிப்பும் உணர்த்துகின்றது.

கருத்துக்கணிப்புகளை நாங்கள் நம்புவது கிடையாது என்றாலும்கூட, அதற்கும் ஒரு வலிமை உண்டு எனப் பார்க்கவேண்டும். சமீபத்திலே இந்தியா டுடே பத்திரிக்கையுடன் CVOTERS இணைந்து Mode of the nation என்ற கருத்துக்கணிப்பை நடத்தியது. அந்த கருத்துக்கணிப்பிலே, இன்று நாடாளுமன்ற தேர்தல் நடந்தால் கூட 39 தொகுதிகளில் திமுக தலைமையிலான கூட்டணிதான் வெல்லும் என்று கூறப்படுகின்றது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 47 சதவீதம் வாக்குகளை வாங்கியிருந்த திமுக கூட்டணி 52 சதவீதம்வாக்குகளை பெறும் என்றும்; அதிமுக 23லிருந்து 20% ஆக குறையும், தேசிய ஜனநாயக கூட்டணி 21 சதவீதம்எனவும் கருத்துக்கணிப்பில் கூறியிருக்கிறார்கள்.

முதலமைச்சரின் ஆட்சிக்கு proincumbencyதான் இருக்கிறது, திராவிட மாடல் ஆட்சிக்கு ஆதரவு அலைதான் வீசுகிறது, Anti–incumbencyஎன்கிறஎதிர்ப்பு அலை கொஞ்சம்கூட இல்லை என்பது உறுதிபடத் தெரிகின்றது. திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலினின் ஆட்சியில் தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடுதான் இருக்கிறார்கள். ஆனால் சிலர் எதாவது சம்பவதை குத்திக் காட்டி, அதை மிகைப்படுத்தி இந்த ஆட்சியைகுறைகூறுகிறார்களே தவற, தமிழக மக்கள் இந்த ஆட்சியில் எதாவது திட்டத்தினால் பயன்அடைந்து மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறார்கள்.

இதற்கு முந்தைய ஆட்சியில் எந்த விதமான ஒரு பயனும் கிடைக்காத மாணவ, மாணவியர்கள் திராவிட மாடல் ஆட்சியில் பயன் அடைந்து வருகின்றனர். இதனால் இளைஞர்கள் அனைவரும் வரவேற்கும் ஆட்சியாகத் திராவிட மாடல் ஆட்சி விளங்குகின்றது. அதை போல் விரைவிலேயே பட்டா வழங்க கூடிய நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. தமிழக மக்களின் மன நிலையைபுரிந்துகொண்டு, அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் திராவிட மாடல் ஆட்சி செய்து வருகிறது.

மறுபுறம் அதிமுக கலகலத்து கொண்டு இருக்கிறது என்பதை 23 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் அவர்கள் வாக்கு வங்கி சரிந்து இருப்பது எடுத்துக்காட்டுகிறது. எல்லா புதிய கட்சிகள், இருக்கிற கட்சிகள் எடுத்து பார்த்தாலும் தேசிய ஜனநாயக கூட்டணி என 21 சதவீததான் வருகிறது. எங்களைப் பொறுத்தவரை 52 சதவீத என்பதை இன்னும் உயர்த்த முதல்அமைச்சர், துணை முதல்அமைச்சர் பணிகளை மேற்கொள்வார்கள்.

நான் இரண்டு தினங்களுக்கு முன்பாக பேசும்போதே சொன்னேன், அதிமுக எடப்பாடி பழனிசாமியின் கட்டுப்பாட்டில் இல்லை. அதை அங்கே இருப்பவர்கள் பேசிகொள்வதிலே தெரிந்து கொள்ளலாம். முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தனது நண்பர்களுடன் பேசிக்கொண்டு இருக்கும்போது, கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, வேலுமணி, தங்கமணியாக இருந்தாலும், எல்லோருமே எனக்கு ஜூனியர்கள்தான் என்று சொன்னதாகத் தகவல் வந்திருக்கிறது.

இதிலிருந்து அவர் எந்த அளவிற்கு ஆதங்கத்தில் இருக்கிறார் என்பதையும், அங்கு இருக்கும் சீனியர்கள் எந்தளவிற்கு ஆதங்கத்தில் இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்த கட்சி கலகலத்து கொண்டு இருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டு தான் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலிலே முதல் முறையாக இரட்டை இலைக்கு வாக்களித்து வந்தவர்கள் உதய சூரியனுக்கு வாக்களித்து இருக்கிறார்கள் என்பது உணர்த்துகின்றது.

கண்ணுக்கு தெரிந்த வரை எதிரிகளே இல்லை என்று ஜெயலலிதா அவர்கள்தான் சொன்னார்கள். நாங்கள் எதிரிகள் இல்லை என்று சொல்லவில்லை. எதிரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாக்கு வங்கி குறைந்துசென்று கொண்டுள்ளது என்றுதான் சொல்கிறோம். எதிர்கட்சிகள் அனைத்தும் வாக்கு வங்கியை சேர்ந்து வந்தாலும், எங்கள் வாக்கு வங்கியை மிஞ்ச முடியாது. அதற்கு ஏற்றால் போல் மக்கள் விரும்பும் ஆட்சியை முதல்அமைச்சர் நடத்தி கொண்டு இருக்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சிறுவனை பாலியல் ரீதியாக துன்புறுத்திய உடற்கல்வி ஆசிரியர் கைது

காந்திநகர், பிப்.15

குஜராத்தின் அம்ரேலியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி வந்தவர் விஷால் சவாலியா. இவர் அதே பள்ளியின் விடுதியில் தங்கி படித்து வந்த 12 வயது சிறுவனை வெகு நாட்களாக பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார்.

இந்த சம்பவம் பற்றி சிறுவன் தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து விஷால் தனது மகனை சுமார் நான்கு முதல் ஐந்து முறை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக சிறுவனின் தந்தை போலீசில் புகார் அளித்தார். மேலும் அந்த புகாரில், விஷால் கடந்த மாதம் 7ம் தேதி சிறுவனை தனது அறைக்கு அழைத்து ஒரு சார்ஜர் கொடுத்துவிட்டு, பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என தெரிவித்திருந்தார். அந்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார் விஷாலை கைது செய்து அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். குற்றவாளியான விஷாலின் போனில் ஓரினச்சேர்க்கை வீடியோக்கள் இருந்ததாக போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# டெல்லியை போல பாஜகவால் பீகாரில் வெற்றி பெற முடியாது லாலு பிரசாத் யாதவ்

பாட்னா, பிப்.15

70தொகுதிகள்கொண்ட டெல்லி சட்டசபைக்கு கடந்த 5ந் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்டு முடிவுகள் பிப்.8ம் தேதி வெளியானது. இதில் 48 இடங்களில் அமோக வெற்றி பெற்று, 27 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பா.ஜனதா ஆட்சியை பிடித்தது. ஆம் ஆத்மி 22 இடங்களை மட்டுமே பிடித்தது. முன்னாள் முதல்மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால், தான் போட்டியிட்ட தொகுதியில் தோல்வி அடைந்தார். கடந்த 2 முறை பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கட்டிலில் இருந்த ஆம் ஆத்மி கட்சி, தற்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர உள்ளது. காங்கிரஸ் கட்சி ஒரு இடத்தில்கூட வெற்றி பெறாமல் பெரும் பின்னடைவை சந்தித்தது.



டெல்லி தேர்தல் வெற்றியை அடுத்து, இந்த ஆண்டு அக்டோபர் நவம்பரில் நடைபெற உள்ள பீகார் சட்டசபை தேர்தலிலும் டெல்லியின் முடிவுகள் எதிரொலிக்கும் என்றும், அங்கும் பாஜக வெற்றி பெறும் என்றும் அக்கட்சியினரும், அதன் கூட்டணி கட்சியினரும் பேசி வருகின்றனர்.

இது குறித்த செய்தியாளர் கேள்விக்கு பதில் அளித்த பீகார் மாநில முன்னாள் முதல்மந்திரியும் , ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவருமான லாலு பிரசாத் யாதவ்,

டெல்லி தேர்தல் முடிவின் தாக்கம் பீகார் தேர்தலில் எதிரொலிக்காது. இங்கு அவர்கள் தூக்கி எறியப்படுவார்கள். நாங்கள் (ராஷ்டிரிய ஜனதா தளம்) இங்கே இருக்கும் வரை பாஜக பீகாரில் ஆட்சி அமைக்க முடியாது. மக்கள் பாஜகவையும் உங்களையும் (ஊடகங்களை) புரிந்து கொண்டுள்ளனர். அப்படியானால், பீகாரில் யார் ஆட்சி அமைப்பார்கள் என்ற கேள்விக்கு பதில் அளித்த லாலு பிரசாத் யாதவ், தேஜஸ்வி யாதவ் ஆட்சி அமைப்பார் என்று கூறினார்.

# வார இறுதி நாட்களை முன்னிட்டு 627 சிறப்பு பேருந்துகள் இயக்கம் போக்குவரத்து துறை

சென்னை, பிப்.15

வார இறுதி நாட்களை முன்னிட்டு 627 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்து துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக: 15/02/2025 (சனிக்கிழமை), 16/02/2025 (ஞாயிறு) வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து:

திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 14, 15 தேதிகளில் 485 பேருந்துகள் இயக்கப்படவுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து:

திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 14, 15 தேதிகளில் 102 பேருந்துகள் இயக்கப்படும்.

சென்னை மாதாவரத்திலிருந்து:

14, 15 ஆகிய தேதிகளில் 40 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது. மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

# அசாம்: 2ம் உலகப்போர் கால வெடிகுண்டு செயலிழக்க வைப்பு

திஸ்பூர், பிப்.15

அசாம் மாநிலத்தின் ஜிலி ஆற்றின் கரையில் செப்டம்பர் 27, 2024 அன்று இரண்டாம் உலகப்போர் காலத்தைச் சேர்ந்த வெடிகுண்டை விமானப்படையினர் கண்டுபிடித்தனர். இது, 182 கிலோ எடை கொண்டது எனவும், செயலில் உள்ள ஆபத்தான வெடிகுண்டு எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, கண்டெடுக்கப்பட்ட வெடிகுண்டை செயலிழக்கச் செய்யும் பணியில் விமானப்படை அதிகாரிகள் ஈடுபட்டு வந்தனர். இதற்காக லக்கிம்பூர் மாவட்டத்தில் உள்ள துலுங் ரிசர்வ் வனப்பகுதிக்குள் வெடிகுண்டு கொண்டு செல்லப்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெடிகுண்டு இருக்கும் பகுதியில் இருந்து 3.5 கிலோ மீட்டர் தொலைவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மேலும், வனவிலங்குகளைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டது.



அதன் பின்னர் வெடிகுண்டு வெற்றிகரமாக செயலிழக்கச் செய்யப்பட்டது. எந்த பிரச்சினையும் இல்லாமல் வெற்றிகரமாக வெடிகுண்டை செயலிழக்கச் செய்ததாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நாளொன்றுக்கு 1,000 மூட்டை நெல் கொள்முதல் செய்திட அமைச்சர் அறிவுறுத்தல்

சென்னை, பிப்.15

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில் உணவுத்துறை உயர்அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில், கடந்த ஆண்டுகளில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் செயலாக்கத்தைப் பற்றியும் வரும் ஆண்டிற்கான அறிவிப்புகள் பற்றியும் கேட்டறிந்தார். நெல் கொள்முதல், நெல் இருப்பு மற்றும் நகர்வு பற்றி ஆய்வு செய்தார்.

நெல் கொள்முதலில் தற்போதுள்ள நடைமுறைப்படி நாளொன்றுக்கு ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையத்திலும் கொள்முதல் செய்யப்படும் உச்சவரம்பினை 32 டன்னிலிருந்து (800 மூட்டைகள்) 40 டன்னாக (1,000 மூட்டைகள்) உயர்த்திக் கொள்முதல் செய்ய அறிவுறுத்தினார்.



நெல் விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு ஏக்கருக்குத் தற்போது நிர்ணயித்துள்ள 2,400 கிலோ (60 மூட்டைகள்) நெல்லினை 2,800 கிலோவாக (70 மூட்டைகள்) உயர்த்திடவும் அறிவுறுத்தினார். நெல் கொள்முதல் நிலையங்களில் அதிகமான நெல் வரத்து இருந்தால், இரண்டு இயந்திரங்கள் வைத்து நெல் கொள்முதல் செய்திடவும் அறிவுறுத்தினார்.

பொது விநியோகத்திட்ட அங்காடிகளில் பொதுமக்களுக்கு கனிவான முறையில் சேவை செய்திடவும் அனைத்துப் பொருட்களையும் தரத்துடன் ஒரே நேரத்தில் வழங்கிடவும் கடைகளுக்கு வரும் பொருட்களின் எடை சரியாகவும் வழங்கப்படும் பொருட்களின் எடை சரியாக இருப்பதையும் ஆய்வு அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார். மாநில எல்லையோரங்களில் அரிசிக் கடத்தலைத் தடுத்திட கண்காணிப்பு பணியைத் தீவிரப்படுத்திடவும், டீசல் கலப்பினை நிறுத்திடவும் குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத்துறையின் காவல் துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பயன்பாட்டினை அதிகப்படுத்திவிவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் அதிக அளவில் சேவை செய்து வருமானத்தை அதிகப்படுத்திடவும் அறிவுரை வழங்கினார். கூட்டத்தில், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர்சத்யபிரதசாகு, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ.சண்முகசுந்தரம், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சா.ப.அம்ரித், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நிதின் கட்கரியுடன் அன்புமணி ராமதாஸ் சந்திப்பு: தமிழக திட்டங்களை விரைந்து செயல்படுத்த வலியுறுத்தல்

சென்னை, பிப்.15

மத்திய நெடுஞ்சாலைகள் மற்றும் சாலைப்போக்குவரத்துத்துறை மந்திரி நிதின்கட்கரியை, டெல்லியில் உள்ள அவரது அலுவலகத்தில் பாட்டாளி மக்கள்கட்சியின்தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான அன்புமணி ராமதாஸ் இன்று சந்தித்து பேசினார். அப்போது தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் பல்வேறு தேசிய நெடுஞ்சாலை பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.



அன்புமணியின் கோரிக்கைகள்:

1. விக்கிரவாண்டி கும்பகோணம் தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் விக்கிவாண்டி முதல் சேத்தியாத்தோப்பு வரையிலான பகுதியில் நீண்ட நாட்களாக பணிகள் நடைபெறாத நிலையில், அவற்றை உடனடியாகத் தொடங்கி விரைந்து முடிக்க வேண்டும்.

2. திண்டிவனம் முதல் கிருஷ்ணகிரி வரையிலான இரு வழிச் சாலையை நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்த வேண்டும்.

3. தேசிய நெடுஞ்சாலை எண் 47ல் சேலத்தையடுத்த மாமங்கலத்தில் சிறிய பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் திருப்பெரும்புதூர் முதல் வாலாஜா வரையிலான பகுதியை 6 வழிச்சாலையாக மாற்றும் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

5. சென்னை கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலையம் முதல் செங்கல்பட்டு வரை பறக்கும் சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

6. வாணியம்பாடி சேலம் தேசிய நெடுஞ்சாலையில் கோபிநத்தம் பட்டி குறுக்கு சாலை முதல் அயோத்தியாப் பட்டினம் வரையிலான 4 வழிச் சாலை பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

7. ஓசூர் தருமபுரி இடையிலான தேசிய நெடுஞ்சாலையில் ( எண் 844) புளிக்கரை நக்கல்பட்டி கிராம சாலை சந்திப்பில் சிறிய மாற்றம் செய்ய வேண்டும்.

8. தொப்பூர் பவானி NH 555H தேசிய நெடுஞ்சாலையில் மேச்சேரி அடுத்த எருமப்பட்டி அருகே சுங்கச்சாவடி அமைக்கும் பணியை கைவிட வேண்டும் இந்தச் சாலையை இரண்டு புறமும் 10 அடி அகலப்படுத்தி சேதமடைந்த சாலைகளை சீரமைத்த பிறகு சுங்கச்சாவடி அமைக்க வேண்டும்.

9.மேச்சேரி பேரூராட்சி வழியாக உள்ள தேசிய நெடுஞ்சாலையால் மேச்சேரி பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அப்பகுதியில் பத்ரகாளியம்மன் கோவில் உள்ளதால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தடுக்க மேச்சேரி பேரூராட்சி பகுதியில் புறவழிச் சாலை அமைக்க வேண்டும்.

10. தர்மபுரி சேலம் தேசிய நெடுஞ்சாலையில் கெங்கலாபுரம் முதல் குரும்பட்டி வரையிலும், அதே நெடுஞ்சாலையில் சவுலூர் என்ற இடத்தில் உள்ள மேம்பாலத்தில் இரு புறங்களிலும் சர்வீஸ் சாலை அமைத்துத் தர வேண்டும்.

11. தர்மபுரி சேலம் தேசிய நெடுஞ்சாலையில் பாளையம்புத்தூர் பிரிவு, சேஷம்பட்டி பிரிவு, தேவர் ஊத்துப்பள்ளம் பிரிவு, புறவடை, ஜாகீர் ஆகிய 5 இடங்களில் மேம்பாலம் அமைக்க வேண்டும்.

12.தர்மபுரிகிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் குண்டல்பட்டி என்ற இடத்தில் அமைக்கப்படவுள்ள மேம்பாலத்தை மாற்றி பழைய தருமபுரியில் அமைக்க வேண்டும். இவ்வாறு கோரிக்கைகள் வைத்தார்.

அன்புமணி ராமதாசின் கோரிக்கைகளைக் கேட்ட மத்திய மந்திரி நிதின் கட்கரி அந்தக் கோரிக்கைகளை விரைந்து செயல்படுத்துவதாக உறுதியளித்தார். இந்த சந்திப்பின் போது பாமக சட்டமன்ற உறுப்பினர்கள் தர்மபுரி எஸ்.பி.வெங்கடேஸ்வரன், சேலம் மேற்கு அருள், மேட்டூர் சதாசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

# சென்னை: பேருந்து நிற்காமல் சென்றதை தட்டிக்கேட்ட பயணி மீது தாக்குதல்

சென்னை, பிப்.15

சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து பூந்தமல்லி செல்வதற்காக நேற்றிரவு சரவண குருநாதன் என்ற பயணி காத்துக்கொண்டு இருந்தார். அப்போது பூந்தமலலிக்கு செல்லும் (தடம் எண் 101) பேருந்து வந்தபோது சரவணகுருநாதன் ஓடிவந்து ஏற முயன்றார். அதற்குள் பேருந்து நிற்காமல் வேகமாக சென்றுவிட்டதாக தெரிகிறது.

இதனால் கோபம் அடைந்த சரவணகுருநாதன், டைம் கீப்பரிடம் சென்று கேட்டு வாக்குவாதம் செய்து உள்ளதாக தெரிகிறது. அப்போது டைம் கீப்பர், சரவணகுருநாதனின் சட்டையை பிடித்து தரதரவென இழுத்துவந்து தாக்கியுள்ளார். தொடர்ந்து அங்கிருந்த ஓட்டுநர் மற்றும் நடத்துநர் ஆகியோர் ஓடிவந்து காலால் எட்டி உதைத்துள்ளனர். இது பற்றி தட்டிக்கேட்ட சில பயணிகளையும் அவர்கள் மிரட்டியதாக தெரிகிறது.



நேற்று நள்ளிரவு 1.30 மணி அளவில் நடந்த இச்சம்பவத்தின் சிசிடிவி காட்சி வெளியான நிலையில், இதுதொடர்பாக கோயம்பேடு காவல்துறையினர் விசாரித்துவருகின்றனர்.

# உத்தரபிரதேசத்தை போலவே டெல்லியிலும் நீண்ட மின்வெட்டு: பாஜக மீது அதிஷி குற்றசாட்டு

புதுடெல்லி, பிப்.15

70 தொகுதிகள் கொண்ட டெல்லி சட்டசபைக்கு கடந்த 5ந் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்டு முடிவு நேற்று வெளியானது. இதில் 48 இடங்களில் அமோக வெற்றி பெற்று, 27 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பா.ஜனதா ஆட்சியை பிடித்தது. ஆம் ஆத்மி 22 இடங்களை மட்டுமே பிடித்தது.

முன்னாள்முதல்மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால், தான் போட்டியிட்ட தொகுதியில் தோல்வி அடைந்தார். கடந்த 2 முறை பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கட்டிலில் இருந்த ஆம் ஆத்மி கட்சி, தற்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர உள்ளது. காங்கிரஸ் கட்சி ஒரு இடத்தில் கூட வெற்றி பெறாமல் பெரும் பின்னடைவை சந்தித்தது.




இந்நிலையில், மணிக்கணக்கான மின்வெட்டுக்கு பெயர் போன உத்தரபிரதேசத்தை போல டெல்லியை மாற்ற பாஜக விரும்புவதாக டெல்லியின் முன்னாள் முதல்மந்திரி அதிஷி குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அதிஷி,


டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி அகற்றப்பட்ட 3 நாட்களுக்குள் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மின்வெட்டுகள் குறித்து 40க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளது. இதனால் மக்கள் இப்போது இன்வெர்ட்டர்களை வாங்க தொடங்கியுள்ளனர். ஆம் ஆத்மி அரசாங்கத்தின் கீழ் மின்சாரத்துறை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது,

பாஜக ஆட்சிக்கு வந்த 3 நாட்களில் அது தலைகீழாக மாறிவிட்டது. பாஜகவுக்கு ஆட்சி செய்வது எப்படி என்று தெரியவில்லை. மணிக்கணக்கான மின்வெட்டுக்கு பெயர்போன உத்தரபிரதேசத்தை போல டெல்லியை மாற்ற பாஜக விரும்புகிறது என தெரிவித்துள்ளார்.

# நேற்று... இன்று... நாளை யாரோ? உதயகுமாருக்கு ரவீந்திரநாத் கேள்வி

சென்னை, பிப்.15

கடந்த சில தினங்களாக அதிமுக விவகாரம் தமிழக அரசியலில் விவாதப்பொருளாக மாறி உள்ளது. ஓரிரு தினங்களுக்கு முன் அவினாசிஅத்திகடவு திட்ட ஒருங்கிணைப்புக் குழு சார்பில் முன்னாள் முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் கலந்துகொள்ளாததும் அதற்கு அவர் அளித்த விளக்கமும் விவாதத்தினைக் கிளப்பியது. இது ஒருபுறம் இருக்க நேற்று, அதிமுக உட்கட்சி விவகாரத்தினை தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம் என சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பளித்தது. நேற்று மாலை கோபிசெட்டி பாளையத்தில் நடந்த கட்சி நிகழ்ச்சியில் செங்கோட்டையன், "கட்சி ஒன்றாக இருக்க வேண்டுமென நினைத்தவன். என்னை சோதித்துப் பார்க்க வேண்டாம்" எனவும் தெரிவித்திருந்தார்.





இந்நிலையில் இன்று எதிர்க்கட்சித் துணைத்தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் வீடியோவொன்றை வெளியிட்டு அதில்,

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் மறுவடிவமாக எடப்பாடி பழனிசாமி இருக்கிறார். ஜெயலலிதாவின் மறைவுக்கு பின் அ.தி.மு.க.வை மீட்டெடுத்து இயக்கத்தை காப்பாற்றியவர் எடப்பாடி பழனிசாமி. அமைதி வளம் வளர்ச்சி என்று தாரக மந்திரத்தோடு உழைத்த ஜெயலலிதாவின் மறுவடிவமாக உள்ள எடப்பாடி பழனிச்சாமி மீண்டும் அதிமுகவை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதற்காகமாபெரும் தியாக வேள்வியை நடத்திக் கொண்டிருக்கிறார். இது சோதனை என்று யாரும் சொல்ல வேண்டாம். ஜெயலலிதாவின் ஆட்சி அமைய வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி உழைத்துக் கொண்டு இருக்கிறார் என அதில் கூறினார்.

இந்தநிலையில், ஆர்.பி.உதயகுமாரிடம் கேள்வி எழுப்பி இது குறித்து ஓபிஎஸ் மகன் ஓ.பி. ரவீந்திரநாத் எக்ஸ் வலைத்தளத்தில் பதிவுஒன்றைவெளியிட்டுள்ளார் அந்த பதிவில், முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆர்.பி.உதயக்குமார் அவர்களே...

நேற்று மாண்புமிகு அம்மா அவர்களின் மறு உருவம் தியாகத்தலைவி சின்னம்மா அவர்கள்...

இன்று மாண்புமிகு எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் மறு உருவம் புரட்சித்தமிழர் எடப்பாடி பழனிச்சாமி...

நாளை யாரோ...? என்ன விளையாட்டு இது...? என கேள்வி எழுப்பி உள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253





மதுரை மாவட்டம், சோழவந்தான் அருகே திருவேடகம் ஏலவார் குழலி சமேத ஏடகநாதர் கோவிலில் பிரம்ம தீர்த்த தெப்ப திருவிழா நடைபெற்றது. இதில் ஏராளமான பொதுமக்கள் ஏடகநாதரை தரிசித்து சென்றனர்.

### சோழவந்தான் அருகே

# திருவேடகம் ஏடகநாதர் கோவிலில் 32 ஆம் ஆண்டு தெப்பத்திருவிழா!

சோழவந்தான், பிப்.15–

சோழவந்தான் அருகே திருவேடகம் ஏலவார் குழலி அம்மன் சமேத ஏடகநாதர் சுவாமி கோவிலில் 32 ஆம் ஆண்டு பிரம்ம தீர்த்த தெப்பத் திருவிழா நடைபெற்றது.

திருவேடகம் ஏடகநாதர் சுவாமி கோவில் சிறப்பு பெற்ற கோவில்களில் ஒன்றாகும் இந்த கோவிலில் வருடந்தோறும் தை மாதம் தெப்பத் திருவிழா நடைபெறும் இவ்விழாவை முன்னிட்டு நேற்று காலை சுவாமியும் அம்பாளும் திருக்கோவிலில் இருந்து பிரம்மதீர்த்த தெப்பத்திற்கு அழைத்து வந்தனர். மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது.

மாலை உலக நன்மைக்காக சுவாமி அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் தீபாரதனை நடைபெற்றது. திரு விளக்கு பூஜை நடந்தது. சுவாமியும் அம்பாளும் வெள்ளி சப்பரத்தில் மின்னல ங்காரத்தில் தெப்பத்தை வளம் வந்து ரத வீதி உலா நடந்தது வழி நெடுக கிராம மக்கள், பக்தர்கள் சுவாமி அம்பாளை வரவேற்று பூஜைகள் செய்தனர்.

விழா ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள் விழா குழு செய்து இருந்தனர். சோழவந்தான் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

### பழனியில்

# துப்பாக்கியுடன் சுற்றி திரிந்த 7 பேர் கைது; தோட்டாக்கள் பறிமுதல்!



பழனி, பிப்.15–

பழனி வனப்பகுதியில் மான், முயல், காட்டுப் பன்றி, யானை உள்ளிட்ட விலங்குகள் உள்ளன. இவைகள் வனப்பகுதியில் உள்ள தோட்டங்களில் சாலைகளிலும் அடிக்கடி உலா வருவது வழக்கம். வனவிலங்குகளை பாதுகாக்க வனத்துறையினர் அடிக்கடி ரோந்து சுற்றி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று வனப்பகுதியினர் பழனியில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது கொடைக்கானல் மலை பாதை பகுதியில் சந்தேகப்படும்படியாக இரண்டு கார்கள் நின்று கொண்டிருந்தன. அவர்களிடம் வனத்துறையினர் விசாரித்தனர். அவர்கள் முன்னுக்கு பின்னாக பேசியதால் கார்களில் சோதனை இட்டனர்.

அப்பொழுது காருக்குள் நாட்டு துப்பாக்கி ஒன்று இருந்தது. அந்தத் துப்பாக்கி உரிமம் ஏதுமில்லை கள்ளத் துப்பாக்கி என தெரிய வந்தது. அதனால் அவர்கள் வன விலங்குகளை வேட்டையாடுவதற்காக சுற்றி திரிந்தனர் என தெரிய வந்தது. ஆனால் எந்த விலங்குகளையும் வேட்டையாடவில்லை.

பின்பு அவர்களை அடிவாரம் போலீசில் ஒப்படைக்கப்பட்டனர். போலீஸ் விசாரணையில் ஆயக்குடியை சேர்ந்த ஷேக் அப்துல்லா வயது 41, பேச்சிமுத்து வயது 27, கர்ணன் வயது 30, கேரள மாநிலம் மலப்புறம் பகுதியைச் சேர்ந்த முகமது ரபீக் வயது 43, நெகாக் வயது 32, அப்துல் லதீப் வயது 55, முஸ்தபா வயது 54, ஆகிய ஏழு நபர்களும் கைது செய்யபட்டனர். அவர்களிடமிருந்த துப்பாக்கி ஆறு தோட்டாக்கள், கார் பறிமுதல் செய்யப்பட்டது.

### தேனி அருகே துணிகர சம்பவம்:

# வீட்டின் கதவை உடைத்து ரூ.2.7 லட்சம் தங்க நகைகள் திருட்டு!

## மர்ம ஆசாமிகளுக்கு போலீஸ் வலை!!

தேனி, பிப்.15–

தேனி அருகே வீரபாண்டியில் அம்மன் நகரைச் சேர்ந்தவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மகன் ஆறுமுகம் (49). இவர் அதே ஊரில் உள்ள ஹோட்டலில் கேசியராக வேலை செய்து வருகிறார். இவரது மனைவி ஒரு தனியார் பள்ளியில் லைப்ரேரியனாக வேலை செய்து வருகிறார்.

இவரது அக்கா மகன் பேத்திக்கு, 2 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதற்காக கணவன் மனைவி இருவரும் கடந்த 8 ஆம் தேதி அன்று இரவு வீட்டை பூட்டிவிட்டு சென்னைக்கு சென்றுள்ளனர். பின்னர் 12 ஆம் தேதியன்று காலை தம்பதியினர் வீட்டின் வெளி கதவின் பூட்டைத் திறந்து உள்ளே சென்று பார்த்துள்ளனர்.

அப்போது, இரும்பு கேட்டு மற்றும் மரக்கதவு பூட்டுகள் உடைக்கப்பட்டு, வீட்டிற்கு உள்ளே மிளகாய் பொடி தூவப்பட்டு பொருட்கள் சிதறி நிலையில் பீரோவில் இருந்த 2 பவுன் கல் பதித்த தங்க நெக்லஸ் 1, 4 பவுன் தங்க ஆரம் 1, 2 பவுன் தங்க நெக்லஸ் சாதா 1, ஒரு பவுன் நவரத்தினம் கல் பதித்த மோதிரம் 1 மற்றும் 32 இன்ச் எல்.இ.டி. டி.வி. என மொத்தம் ரூ.2 லட்சத்து 75 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை மர்ம நபர்கள் வீட்டின் சுவற்றின் வழியாக ஏறி, மாடிப்படி வழியாக உள்ளே சென்று மர்ம நபர்கள் திருடி விட்டுச் சென்றதாக பாதிக்கப்பட்ட ஆறுமுகம் வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



மேட்டூர் அணை கட்டி முடிக்கபட்டு 91 ஆண்டுகள் நிறைவடைந்தது. அணையின் தன்மை குறித்து 16 கண் மதகு பகுதியில் சென்னை ஐ.ஐ.டி. பேராசியர் அழகு சுந்தரமூர்த்தி நீர்வளத்துறை அதிகாரியுகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

### சிவகங்கையில்

# 13 ஜோடிகளுக்கு திருமணம் 7.80 லட்சம் மதிப்பீல் சீர்வரிசை!

## அமைச்சர் வழங்கினார்!!

சிவகங்கை, பிப்.15–

சிவகங்கையில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 13 ஜோடிகளுக்கான திருமணம் ஆட்சி தலைவர் ஆஷா அஜித் முன்னிலையில் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.


மாநில இந்து சமய அறநிலையத்துறையின் அறிவிப் பின்படி இலவச திருமண திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 13 ஜோடிகளுக்கு சுந்தர்ராஜ பெருமாள் கோவிலில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித் முன்னிலையில் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இத்திருமண ஜோடிகளுக்கு அமைச்சர் பெரியகருப்பன் 4 கிராம் தங்க தாலி எடுத்துக் கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தார். இப் புதுமண தம்பதிகளுக்கு பெண் வீட்டார் அளிக்கும் சீதனத்தைப் போல அரசின் சார்பில் சீர்வரிசையினையும் அமைச்சர் வழங்கினார்.

அரசின் சார்பில் வழங்கப்பட்ட சீர்வரிசை பொருட்களில் பீரோ, கட்டில், பெட்ஷீட், தலையணை, போர்வை, பாய், மிக்ஸி, அரிசி மூட்டை, கேஸ் ஸ்டவ், பித்தளை குடம், குத்துவிளக்கு, வேஷ்டி, சேலை, பாத்திரங்கள், குக்கர், கடிகாரம் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய சீர்வரிசியினை அமைச்சர் மற்றும் ஆட்சி தலைவர் வழங்கினர்.

முன்னதாக திருமணத்திற்காக தம்பதிகளுக்கு மாங்கல்யம் மற்றும் புது வேட்டி சட்டை வழங்கினர் வேத விற்பனர்கள் மந்திரங்கள் முழங்க இப் புதுமண தம்பதிகளுக்கு பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் திருமணம் இனிதே நடைபெற்றது. தொடர்ந்து திருமணத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உணவும் வழங்கப்பட்டது வழங்கப்பட்டது.

# சாலையில் திடீரென தீப்பிடித்து எரிந்த கார்!



தர்மபுரி, பிப்.15–

அரூர் அருகே நடுரோட்டில் கார் திடீரென தீப்பிடித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள தென்கரைகோட்டையை சேர்ந்தவர் ஆசிப்கான். இவர் தனக்கு சொந்தமான டாடா இண்டிகா காரை எடுத்துக்கொண்டு அரூர் நோக்கி வந்துள்ளார்.

அப்போது எச்.தொட்டம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே கார் சென்ற போது, என்ஜின் பகுதியில் கரும் புகை எழும்பிய நிலையில் காரை நிறுத்தி ஆசிப்கான் வெளியேறினார். இந்நிலையில் திடீரென கார் தீப்பிடித்து மளமளவென எரிந்தது.

அக்கம்பக்கம் இருந்தவர்கள் தீயை அணைக்க முயன்று முடியாத நிலையில் அரூர் தீயணைப்பு துறையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர். இதில் கார் முற்றிலும் எரிந்து சேதமானது.

இதுகுறித்த அரூர் போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் பேட்டரியில் ஏற்பட்ட மின்கசிவின் காரணமாக தீப்பற்றியிருக்கலாம் என தெரிய வந்துள்ளது.

### தென்காசி அருகே

# குடும்பத்தகராறில் காதல் மனைவியை அடித்துக் கொன்ற கணவர் கைது!

## பரபரப்பு வாக்குமூலம்!!

தென்காசி, பிப்.15–

தென்காசி மாவட்டம், கொல்லம்மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இலத்தூர் அருகே மதுநாதபேரி குளம் பகுதியில் கடந்த 11ந் தேதி எரிந்த நிலையில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க பெண்ணின் உடல் கிடப்பதாக கிடைத்த தகவலின் பேரில் இலத்தூர் போலீசார் விரைந்து சென்று, பிணத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்த பெண்ணின் இடது கை மட்டும் எரியாத நிலையில் காணப்பட்டது. மேலும் அருகில் மது பாட்டில்கள் கிடந்ததால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

மேலும், தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். அரவிந்த் உத்தரவின்பேரில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில், அந்தப் பகுதியில் கார் ஒன்று வந்து சென்றது அருகில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களில் பதிவாகி இருந்தது. அந்த காரின் எண்ணை வைத்து உரிமையாளரிடம் விசாரித்த போது சிவகாசி பாரதி நகரை சேர்ந்த தனது நண்பரான ஜான் கில்பர்ட் என்பவரிடம் காரை அவர் கொடுத்தது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் ஜான் கில்பர்ட்டை பிடித்து விசாரித்ததில் அவர் தான் தனது மனைவியான கமலியை கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். மேலும் ஜான் கில்பர்ட் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது:

சிவகாசியில் ஒரு பெயிண்ட் கடையில் நான் வேலை செய்து வந்தேன். அப்போது அதே பகுதியில் டெய்லர் கடையில் வேலை பார்த்து வந்த கமலியை காதலித்து திருமணம் செய்து கொண்டேன். எங்களுக்கு 5 வயதில் பெண் குழந்தை உள்ளது. கடந்த 9ந்தேதி எனக்கும், கமலிக்கு தகராறு ஏற்பட்டது.

இதனால் ஆத்திமடைந்த நான் அவரை கம்பியால் அடித்து கொலை செய்து விட்டேன். பிணத்தை என்ன செய்வதென்று தெரியாமல் நண்பரின் காரை வாங்கி ஊர், ஊராக 2 நாட்கள் சுற்றினேன். துர்நாற்றம் வீச ஆரம்பிக்கவே இலத்தூர் பகுதிக்கு கொண்டு வந்து அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக பிணத்தை எரித்து விட்டேன் என தெரிவித்ததாக போலீசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தென்காசி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# செங்கோட்டையனை பாராட்டி அ.தி.மு.க வில் போஸ்டர்!

## சிவகங்கையில் பரபரப்பு!!




சிவகங்கை, பிப்.15–

சிவகங்கையில் அரண்மனை வாசல், காந்தி வீதி உள்ளிட்ட நகரின் முக்கிய வீதிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அ.தி.மு.க வினர் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனை பாராட்டி போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருப்பது அ.தி.மு.க வினர் இடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நகரின் முக்கிய வீதிகளான அரண்மனை வாசல், காந்தி வீதி, கோர்ட் வாசல், வாரச்சந்தை உள்ளிட்ட நகரின் முக்கிய பகுதிகளில் அ.தி.மு.க கட்சியின் முக்கிய பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையனை பாராட்டியும் வாழ்த்தியும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக அ.தி.மு.க வில் செங்கோட்டையனின் அறிக்கை தொண்டர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது இந்நிலையில் அடுத்த கட்டமாக செங்கோட்டையனை வாழ்த்தி அ.தி.மு.க தொண்டர்கள் போஸ்டர் ஒட்ட தொடங்கியுள்ளனர்.

அ.தி.மு.க கட்சியின் இருபெரும் தலைவர்களான எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவின் விசுவாசிகள் அ.தி.மு.க வில் இருந்து வருகின்ற நிலையில் செங்கோட்டையின் அறிக்கையும் அவரை வாழ்த்தி ஒட்டிய போஸ்டர்களாலும் அ.தி.மு.க வில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது மேலும் கட்சியினரிடையே குழப்பமும் நிலவி வருகிறது.

இப்போஸ்டர் குறித்து சிவகங்கையை சேர்ந்த அ.தி.மு.க வின் முக்கிய பிரமுகர் தெரிவிக்கையில் செங்கோட்டையன் அ.தி.மு.க வில் அம்மாவிடம் நெருக்கமாகவும் அவரின் உண்மை தொண்டனாகவும், எம்.ஜி.ஆரின் விசுவாசியாகவும் இருந்தவர் அ.தி.மு.க தொண்டர்களை என்றும் ஒருங்கிணைத்து மதிக்க கூடியவர் புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவியின் படத்தை மறைப்பது போன்ற செயல்களை கண்டித்து உடனடியாக சுட்டிக்காட்டிய செங்கோட்டையனை பாராட்டி போஸ்டர் ஒட்டிய தொண்டர்களை பாராட்டுகிறோம் என்றார்.

### மானாமதுரை மேலப்பிடாவூரில்

# கல்லூரி மாணவருக்கு கையில் வெட்டு; மூன்று பேர் கைது!



மானாமதுரை, பிப்.15–

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே உள்ள மேலப்பிடாவூர் கிராமத்தைச் சேர்ந்த ராமன் மகன் அய்யாச்சாமி 19, பட்டியலின வகுப்பைச் சேர்ந்த இவர் சிவகங்கை அரசு கலைக் கல்லூரியில் பி.எஸ்.சி., 3ம் ஆண்டு (கணிதம்) படித்து வருகிறார். இவர் நேற்று முன்தினம் கல்லூரிக்கு சென்று விட்டு தனது பைக்கில் உறவினரான பொன்முத்துவுடன் வந்தார். அப்போது மேலப்பிடாவூரில் உள்ள அவரது வீட்டில் இறக்கி விட்டு தனது வீட்டிற்கு வரும் வழியில் முதியவர் ஒருவர் குறுக்கே வந்தார்.

பைக்கில் இருந்து இறங்கி அவரை ஓரமாக செல்லுமாறு கூறி வீட்டு மீண்டும் பைக்கை எடுக்க முயன்ற போது அங்கு வந்த அதே ஊரைச் சேர்ந்த செல்லச்சாமி மகன் வினோத்குமார் 20, அரியசாமி மகன் ஆதீஸ் வரன் வல்லரசு 23, மற்றும் 24, ஆகிய மூன்று பேரும் சேர்ந்து ஜாதியை சொல்லி தகாத வார்த்தைகளால் திட்டி அய்யாசாமியுடன் தகராறு செய்தனர். வினோத் என்பவர் அய்யாச்சாமியை வாளால் வெட்டியதில் 2 கைகளிலும் அய்யாச்சாமிக்கு காயம் ஏற்பட்டு சிவ கங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அய்யாச்சாமியின் தாய் செல்லம்மாள் மானாமதுரைசிப்காட் போலீசில் கொடுத்த புகாரில் போலீசார் மேற்கண்ட 3 பேரையும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்தனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# நெல் கொள்முதல் நிலையம் மூலம் 10 ஆயிரம் டன் நெல் பெறப்பட்டது!

சிவகங்கை, பிப்.15–

சிவகங்கை மாவட்ட அளவில் கடந்த அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான வடகிழக்கு பருவமழையின் காரணமாக 1.95 லட்சம் ஏக்கரில் விவசாயிகள் நெல் பயிரிட்டு இருந்தனர் தற்போது தை மாத துவக்கத்திலிருந்து நெல் அறுவடை பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டத்தில் விவசாயிகள் நெல்லை அறுவடை செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் மூலம் 80 கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்த மாவட்ட நிர்வாகத்தால் திட்டமிடப்பட்டு தற்போது வரை 50 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.

இன்னல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து நெல்லினை பெற்று வருகின்றனர் 100 கிலோ மூடை ஒன்றுக்கு முதல் ரகத்திற்கு 2 ஆயிரத்து 450 ரூபாயும் சன்னரகத்திற்கு 2 ஆயிரத்து 405 ரூபாய் அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகிறது இ கொள்முதல் நிலையத்தில் மூலம் பெறப்படும் நெல்லுக்கான தொகையினை விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்குவதற்கான நடவடிக்கையினையும் மாவட்ட நிர்வாகம் எடுத்து வருகிறது.

மாவட்டம் முழுவதும் உள்ள 50 குரு முதல் நிலையங்களின் வாயிலாக விவசாயிகளிடமிருந்து இது வரை 10 ஆயிரம் டன் நெல் மூட்டைகள் பெறப்பட்டுள்ளது தொடர்ந்து விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.

மாவட்டம் முழுவதும் நெல் அறுவடை பணிகள் முடியும் வரை கொள்முதல் நிலையங்களின் வாயிலாக விவசாயிகளிடம் இருந்து நெல் பெறப்படும் எனவும் அதற்கான தொகையினை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கும் பணியும் தீவிரபடுத்தப்பட்டு இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறியுள்ளனர்.



சிவகங்கை மாவட்டம், வேங்கைப்பட்டி புது கண்மாயில் மீன்பிடித் திருவிழா நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஒன்று கூடி கச்சா, வலை உள்ளிட்ட மீன்பிடி சாதனங்கள் மூலம் கண்மையில் இறங்கி மீன் பிடித்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066